18th August 1960]

SRI S. M. ANNAMALAI : சில உயர்நிலைப் பள்ளிகளில் 11-வது ஸ்டான்டேர்ட் ஆரம்பிக்கப்படுமென்று பதில் சொன்னார்கள். தாலுகாவிற்கு ஒன்று என்று இல்லாது இரண்டு வீதம் ஆரம்பிக்க சர்க்கார் முன்வருவார்களா? ஒன்றுதான் ஆரம்பிக்கப் போவதாக கேள்விப்பட்டேன், அது உண்மையா?

THE HON. SRI C. SUBRAMANIAM : கேள்விப்பட்டது சரியா இல்லையா என்று தெரியாது. எந்தெந்த இடத்தில் எந்த அடிப் படையில் 1962-63-ல் ஆரம்பிக்கப்படவேண்டுமென்று முடிவு செய்யப்படவில்லை. ஆனால் தொடர்ந்து மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் போதுமான அளவு பள்ளிக்கூடங்கள் எல்லாப் பகுதிகளிலும் ஆரம்பிப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

SRI N. MARUDACHALAM : புது உயர்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்துவதில் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் முன்வந்தால் சர்க்கார் உதவி செய்யுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : அப்படி மக்கள் முன் வருவதை எப்பொழுதும் சர்க்கார் வரவேற்கிறது. ஆனால் அப்படி முன்வருவதால் சௌகரியம் இல்லாத இடங்களில் இதை ஆரம்பிக்க முடியாது. அந்தந்தப் பள்ளிக்கூடங்களைப் பொறுத்து இப்பொழுதுள்ள சௌகரியங்களுக்குமேல் என்ன சௌகரியங்கள் செய்து கொடுக்க மக்கள் தயாராயிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து முடிவு செய்யவேண்டியிருக்கிறது.

SRI K. ANBAZHAGAN : இந்த உயர்தர நடுநிலைப் பள்ளிகளில் உயர்தர வகுப்புக்குரிய பாட திட்டமும், ப்ரீ-யூனிவர்ஸிடி பாட திட்டமும் ஏறத்தாழ ஒரளவாக அமைந்திருக்கிறதா? அப்படி யானால் இதற்கான தமிழ்ப் பாடப் புத்தகங்களை இப்பொழுதே தயாரிக்க ஏதாவது முயற்சியுண்டா?

THE HON. SRI C. SUBRAMANIAM : பதினோராவது வகுப்பு முடிகிறபோது, ப்ரீ-யூனிவர்ஸிட்டியில் படித்து வெளி வருகிறவர் களின் கல்வித்தரம் இவர்களுக்கு ஏற்படவேண்டுமென்பதுதான் இதன் நோக்கம். அதற்கான புத்தகங்கள் தயாராகிக் கொண்டிருக்கின்றன.

Scavengers

* 269 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) மல, மூத்திரங்களை நகர சுத்தியாளர்கள் தலைச் சுமையாகக் கொண்டுபோகும் வழக்கத்தை ஒழிப்பதற்காக ஆராய்ந்தறிய சர்க்காரால் நியமிக்கப்பட்ட ஆலோசனை போர்டின் அறிக்கையானது சர்க்காருக்குக் கிடைத்துவிட்டதா?

[18th August 1960

(ஆ) அப்படியானல் இதன் நகல் ஒன்று அசெம்பளி நூல் நிலேயத்தில் வைக்கப்படுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Land revenue

* 27 *Q.*—SRI P. G. MANICKAM : கனம்ரெவின்யு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) "Land Revenue" வரியை உரிய காலத்தில் வசூல் செய்த அதிகாரிகளுக்குப் பரிசு வழங்கப்படும் திட்டம் அமுல் நடத்தப்பட்டு வருகிறதா ?

(ஆ) அப்படியானல், 1959, 1960-ல் எந்தெந்த ஜில்லா அதிகாரிகளுக்கு இப்பரிசுகள் வழங்கப்பட்டன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No Sir

(*b*) Does not arise.

Untouchability

* 273 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) தீண்டாமைக் கொடுமைகளை எடுத்துக்காட்டும் எத்தனை வித சுவரொட்டி விளம்பரங்கள் 1960-61-ஆம் வருடத்தில் வெளியிடப்படும் ?

(ஆ) ஒவ்வொரு சுவரொட்டி விளம்பரத்திலும் எவ்வித மான தீண்டாமைக் கொடுமைகளைத் தெரியப்படுத்தும் படங்கள் வரையப்படும் ?

(இ) தீண்டாமைக் கொடுமைகளை விளம்பரப்படுத்த வேறு முறைகளும் கையாளப்படுமா ?

(ஈ) அவ்வாருயின், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Two different posters on the evils of untouchability are to be produced during 1960-61.

(*b*) It will be of general nature.

(*c*) Yes, Sir.

(*d*) Staging of dramas, etc.

SRI P. G. MANICKAM : இதற்காக எவ்வளவு தொகை செலவிட திட்டமிடப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : 1960-61ல் ரூ. 25,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.

SRI K. B. S. MANI : இந்த சுவரொட்டிகள் மூலம் தீண்டாமையை ஒழித்து விடலாம் என்று கருதி இந்த சுவரொட்டிகளின் வழி விளம்பரப்படுத்துவது அவசியம்தானு என்று பரிசிலனே